
உறுப்பு நன்கொடை
முடிவு செய்தல். அறிவித்தல். இறுக பற்றிக் கொள்ளல்.
தற்பொழுதே முடிவு செய்து உறுப்பு நன்கொடை அட்டையை நிரப்பவும்.
உறுப்பு நன்கொடை அட்டை
உறுப்பு நன்கொடை-அட்டை
LEBEN-IST-TEILEN.CH
மாற்று அறுவை சிகிச்சைக்காக உறுப்புகள், திசுக்கள் அல்லது கலங்களை அகற்றுவதற்கு சார்பகவோ அல்லது எதிராகவோ விருப்பத்தை வெளிப்படுத்துதல்.

**இறப்பு ஏற்படுகையில் உறுப்புகள், திசுக்கள் அல்லது கலங்களை அகற்றி எடுப்பது பற்றிய தகவல்.**

## உறுப்பு நன்கொடை பற்றி பேசுவதற்கு மூன்று சிறந்த காரணங்கள்.

### 1. என் மீதுள்ள கருணையின் பேரில்

என் உடலுக்கு, வாழ்க்கையிலும் அதற்கு பின்னரும் என்ன நடக்கிறது என்பதை நானே சுயமாக தீர்மானிக்கிறேன். எனவே எனது மரணத்திற்குப் பிறகு, நன்கொடைக்கான வாய்ப்பு ஏற்படுகையில், உறுப்புகள், திசுக்கள் அல்லது கலங்களை நன்கொடை செய்ய வேண்டுமா இல்லையா என்பதை நான் முடிவு செய்கிறேன்.

### 2. என் உறவினர்கள் மீதுள்ள அன்புக்காக

உறுப்பு நன்கொடை பற்றிய கேள்வி அனேகமாக திடீரென்று எழுகிறது. என் விருப்பத்தை என் அன்புக்குரியவர்கள் அறிந்து கொள்வது நல்லது. இது அவர்கள் என் மனதில் உள்ளதை எனக்குச் சார்பாக தீர்மானிக்க உதவுகிறது.

### 3. உயிர் மீதுள்ள அன்புக்காக

சுவிட்சர்லாந்தில், உயிர் வாழ்வதற்கு அவசியமான உறுப்புக்காக பலர் காத்திருக்கின்றனர். நன்கொடைக்கு எனது "ஆம்" என்ற சொல்லின் மூலம் ஒரு உயிரைக் காப்பாற்ற முடியும்.

## உங்கள் விருப்பத்தை இறுக பற்றிக் கொள்ளுங்கள்

இறப்பு ஏற்பட்டால் உறுப்புகள், திசுக்கள் அல்லது கலங்களை அகற்றி எடுப்பதற்கு நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா இல்லையா என்பதை இப்போது முடிவு செய்யுங்கள். ஏனெனில் உங்கள் விருப்பம் தெரியாவிட்டால், உங்கள் நெருங்கிய உறவினர்களும் இந்த கடினமான கேள்வியை மிகவும் சுமையுடன் கூடிய ஒரு சூழ்நிலையில் எதிர்கொள்வார்கள். விடயத்தைக் கையாளவும், ஒரு முடிவை சுயமாக எடுத்து இந்த சிற்றேட்டின் முடிவில் நன்கொடை அட்டையை நிரபுங்கள். உங்கள் முடிவைப் பற்றி உங்கள் குடும்பத்தாரிடம் பேசி அவர்களது சுமையை சற்று குறைத்துக் கொள்ளுங்கள்.

## உங்கள் விருப்பத்தை இறுக பற்றிக் கொள்ளுங்கள்

இறந்த நன்கொடையாளர்களின் உறுப்புகள் மூலம் தீவிரமாக நோய்வாய்ப்- பட்டவர்களுக்கு உறுப்பு மாற்றம் செய்யப்பட முடியும். உதாரணமாக, கடுமையான "பங்கஸ்" விஷத்திற்குப் பிறகு ஈரல் மாற்று அறுவை சிகிச்சை மூலம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். இறந்தவரின் திசுக்கள் கூட உயிரைக் காப்பாற்றலாம் அல்லது குறைந்த பட்சம் கடுமையான பலவீனமான வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உதவ முடியும். இதயக் குறைபாடுள்ள குழந்தை ஒன்றுக்கு இதய வால்வு உதவும். கண்ணின் (மென்சவ்வு) கார்னியா ஒருவருக்கு குருடராவதை தடுக்கின்றது.

***மேலதிக தகவல்கள் இவற்றின் கீழ்:***
*www.leben-ist-teilen.ch*
*www.bag.admin.ch/transplantation*
*www.swisstransplant.org*
***மற்றும் உங்கள் குடும்ப மருத்துவர்.***

## இறந்த பிறகு எவற்றை நன்கொடை செய்ய முடியும்?

கீழ்வரும் உறுப்புகளை மரணத்திற்குப் பின் நன்கொடை செய்ய முடியும்: சிறுநீரகங்கள், நுரையீரல்கள், ஈரல், இதயம், கணையச் சுரப்பி (மற்றும் அதன் தீவு கலங்கள்) மற்றும் சிறுகுடல்: உறுப்புகளுக்கு தவிர, கண்ணின் (மென்சவ்வு) கார்னியா, இதய வால்வுகள் அல்லது பெரிய இரத்த நாளங்கள் போன்ற திசுக்களையும் தானம் செய்ய முடியும்.

***இரத்த ஸ்டெம் (குருதி மச்சைக்) கலங்களை உயிருடன் இருப்பவர்களால் மட்டுமே நன்கொடையளிக்க முடியும். இந்த கலங்களை உறுப்பு மாற்றம் செய்வதே பெரும்பாலும் லுகேமியா மற்றும் பிற இரத்தக் கோளாறுகள் உள்ளவர்களுக்கு குணப்படுத்துவதற்கான ஒரே வாய்ப்பாகும். மேலதிக தகவல்:***
*www.leben-ist-teilen.ch*




## யார் நன்கொடை வழங்க முடியும்?

இறந்த பின் உடல் உறுப்புகளை நன்கொடை செய்வது முதுமையிலும் சாத்தியமாகும். எனவே, சில வேளைகளில் 80 வயதுக்கு மேற்பட்டவர்களும் கூட நன்கொடை வழங்கலாம். பல சந்தர்ப்பங்களில், நீங்கள் மருந்து எடுத்துக் கொண்டால் அல்லது உங்களுக்கு முந்தைய நோய் இருந்தால் நன்கொடையும் ஒரு விருப்பமாக அமையலாம். எனவே, உங்கள் சொந்த விருப்பத்தை இறுக பற்றிக் கொள்ளல் எவ்வாறாயினும் அர்த்தமுள்ளதாக இருக்கிறது. இது 16 வயதிலிருந்தே சாத்தியமாகும். இளையோர்களின் விடயத்தில், சட்ட ரீதியாக பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் முடிவு செய்கிறார்கள்.

## எவ்வாறான சூழ்நிலைகளில்?

*மரணத்திற்குப் பிறகு உறுப்பு நன்கொடை செய்வதற்கான கட்டமைப்பு நிபந்தனைகள் அரிதாகவே வழங்கப்படுகின்றன. மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் யாராவது இறந்தால் மட்டுமே நன்கொடை கவனத்தில் எடுக்கப்படும், உதாரணமாக பெரிய பெருமூளை ரத்தக்கசிவு, கடுமையான மண்டையோடு மூளைக் காயம் அல்லது கடுமையான மாரடைப்பு. வீட்டிலோ அல்லது விபத்து நடந்த இடத்திலோ இறந்தவர்களின் உடல் உறுப்புகளை நன்கொடை செய்ய முடியாது.*

*மருத்துவமனையில் இறக்காதவர்களிடமிருந்தும் கண்ணின் கார்னியா (மென்சவ்வு படலம்) போன்ற திசுக்களை அகற்றி எடுக்கப்படலாம். திசுக்களைப் பொறுத்து, இது இறந்த 48 மணிநேரம் வரை மேற்கொள்ளப்பட முடியும். மாற்று அறுவை சிகிச்சைக்கு முன் திசுக்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு சேமித்து வைக்க முடியும்.*

## நம்பிக்கையற்ற முன்கணிப்பு

எவ்வளவோ முயற்சி செய்தாலும், ஒவ்வொரு உயிரையும் தீவிர சிகிச்சை பிரிவில் காப்பாற்ற முடியாது. முன்கணிப்பு நம்பிக்கையற்றதாக இருந்தால், நோயாளி மரணமடையும் வகையில் உயிர்காக்கும் சிகிச்சைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். நோய்த்தடுப்பு சிகிச்சைகள் மட்டுமே இறக்கும் வரை தொடரும். உதாரணமாக, அந்த நபர் அவதிபடக்கூடாது என்பதற்காக வலிநிவாரண மருந்துகள் கொடுக்கப்படுகின்றன.


உயிர் காக்கும் சிகிச்சையை நிறைவு செய்வதற்கான முடிவு, உறவினர்களுடன் சேர்ந்து மருத்துவர்களினால் எடுக்கப்படுகிறது. இதன்போது உறுப்பு நன்கொடை சாத்தியமா இல்லையா என்பதில் தங்கியிருக்காது எப்போதும் முடிவு எடுக்கப்படுகிறது.
உடல் உறுப்பு நன்கொடை மருத்துவ ரீதியாக சாத்தியம் என்றால், இது இறக்கும் நபரின் விருப்பத்திற்கு ஏற்ப உள்ளதா இல்லையா என்பதை மருத்துவர்கள் தெளிவுபடுத்துகிறார்கள்.

## சம்மதத்துடன் மட்டுமே நன்கொடை

உறுப்புகள், திசுக்கள் மற்றும் கலங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தால் மட்டுமே மரணத்திற்குப் பிறகு அகற்றி எடுக்கப்படும். தேவையான ஆயத்த முன்னேற்பாட்டு மருத்துவ நடவடிக்கைகளுக்கும் ஒப்புதல் தேவை ("ஆயத்த முன்னேற்பாட்டு மருத்துவ நடவடிக்கைகள்" என்ற அத்தியாயத்தைப் பார்க்கவும்). மருத்துவர்கள் எப்போதும் இந்த கேள்விகளை உறவினர்களுடன் விவாதிக்கிறார்கள்.
பின்வரும் ஒழுங்கு விதிகள் செல்லுபடியாகின்றன:

- ஒரு நபர் தனது விருப்பங்களை உதாரணமாக உறுப்பு நன்கொடை அட்டையில் அல்லது நோயாளர் உயிலில், பதிவு செய்திருந்தால், இவ் விருப்பம் நிச்சயமாக கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
- ஆவணப்படுத்தப்பட்ட ஒப்புதல் அல்லது மறுப்பு இல்லை என்றால், நெருங்கிய உறவினர்களிடம் உயில் பற்றி தெரியுமா என்று கேட்கப்படும். இல்லையெனில், நீங்கள் ஒரு முடிவைக் கூறுமாறு வேண்டப்படுவர். இந்த முடிவை எடுக்கும்போது, உறவினர்கள் சம்பந்தப்பட்ட நபரின் அனுமான விருப்பத்தை கவனதில் எடுக்க வேண்டும். உறவினர்கள் யாரையும் தொடர்பு கொள்ள முடியாவிட்டால் அல்லது அவர்கள் இதைப் பற்றி கருத்து தெரிவிக்கவில்லை என்றால், உறுப்புகள், திசுக்கள் அல்லது கலங்களை அகற்றி எடுப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.
- ஒருவர் நம்பிக்கைக்குரிய நபரிடம் முடிவை ஒப்படைத்திருந்தால், உறவினர்களுக்குப் பதிலாக இந் நபர் முடிவெடுப்பார்.

சிகிச்சைகளை நிறுத்தி, அந்த நபரை இறக்க அனுமதித்த பிறகுதான், உறுப்பு நன்கொடை செய்வதற்கான சாத்தியக்கூறுகளை உறவினர்களுடன் விவாதிக்க மருத்துவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.



## நன்கொடைக்கான ஏற்பாடுகலுக்கு நேரம் எடுக்கும்

நன்கொடை அங்கீகரிக்கப்பட்டிருந்தால், அநேக விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டு ஒழுங்கமைக்கப்பட வேண்டும். மாற்று அறுவை சிகிச்சைக்கு எந்த உறுப்புகள் பொருத்தமானவை என்பதை தெளிவுபடுத்த பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உறுப்புகளுக்கு பொருத்தமான பெறுநர்களைக் கண்டறிய இரத்த மாதிரிகளின் ஆய்வுகூட பகுப்பாய்வுகளும் தேவைப்படுகின்றன. இறுதியாக, உறுப்புகளை அகற்றி எடுத்தல் மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இந்த ஏற்பாடுகள் பல மணிநேரம் ஆகலாம். வைத்தியசாலியில் இச் செயல்முறையானது ஒரு நபர் நன்கொடை செய்ய விரும்பாததை விட இதற்கு அதிக நேரம் எடுக்கும்.

**உறுப்புகளை சேதத்திலிருந்து பாதுகாக்கவும்**
நன்கொடைக்கான தயாரிப்புகளின் போது, உறுப்புகள் சேதமடைவதையும் அவற்றின் தொழில்பாடுகள் இழப்பதையும் தடுப்பது முக்கியம். இதற்கு ஆயத்த முன்னேற்பாட்டு மருத்துவ நடவடிக்கைகள் தேவை: பாதிக்கப்பட்ட நபர் தொடர்ந்து செயற்கைச்சுவாசம் மற்றும் மருந்துகளைப் பெறுகிறார், இதனால் குருதிச் சுற்றோட்டம் பராமரிக்கப்படுகிறது என்பதுடன் உறுப்புகளுக்கு ஒக்ஸிஜன் (பிராண வாயு) தொடர்ந்து வழங்கப்படுகிறது.

## மருத்துவ ரீதியான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள்

மருத்துவ ரீதியான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் என்பது உறுப்புகளைப் பாதுகாக்க உதவும் நன்கொடையாளருக்கான மருத்துவ சிகிச்சைகள் ஆகும். மரணத்திற்கு முன்பும் பின்பும் உறுப்புகள் அகற்றப்படும் வரை சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நிலைமையைப் பொறுத்து, பின்வரும் நடவடிக்கைகள் அவசியமாகின்றன:

- செயற்கை சுவாசம் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது.
- உடலின் குருதிச் சுற்றோட்டம் மற்றும் உட்புற சூழல் மருந்துகளால் ஸ்திரமாக நிலைநிறுத்தி வைக்கப்படுகின்றது.
- ஆய்வு கூடத்தில் உள்ள உறுப்புகளின் செயல்பாடுகளை கண்காணிக்க பல்வேறு மாதிரிகள் எடுக்கப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகளால் நன்கொடையாளருக்கு எந்தப் பயனும் இல்லை, ஆயினும் மாற்றுச் சத்திர சிகிச்சை மூலம் உறுப்புகள் இடமாற்றம் செய்யப்பட்டு பின்னர் அவை நன்றாகச் செயல்படுவதற்கு முற்றிலும் இது அவசியம்.

**ஒப்புதல் அவசியம்**

- நன்கொடைக்கு "ஆம்" என்று கூறும் எவரும், உறுப்புகளை அகற்றி எடுத்தல் மற்றும் முன்னேற்பாட்டு ஆயத்த நடவடிக்கைகள் ஆகிய இரண்டிற்கும் உடன்பட வேண்டும். எனவே நன்கொடை அட்டையில் உள்ள "ஆம்" என்பது ஆயத்த மருத்துவ நடவடிக்கைகளுக்கும் பொருந்தும்.
- முன்னேற்பாட்டு ஆயத்த நடவடிக்கைகளுக்கான எழுத்துமூர்வ அறிவிப்பு இல்லை என்றால், உறவினர்கள் அல்லது நம்பிக்கைக்குரிய நபர் அவர்கள் சார்பாக தங்கள் சம்மதத்தை அளிக்க வேண்டும்.

## இரண்டு வகையான நன்கொடைகள்

**உடல் உறுப்பு நன்கொடை தொடர்பான செயல்முறையானது தீவிர சிகிச்சைப் பிரிவில் மரணம் எவ்வாறு நிகழ்கிறது என்பதைப் பொறுத்தது. இரண்டு வெவ்வேறான செயல்முறைகள் உள்ளன:**

**மிகவும் கடுமையான மூளையின் பாதிப்பு மரணத்திற்கு வழிவகுக்கிறது:**
செயற்கைச் சுவாசம் உள்ள நபரின் மூளை மிகவும் மோசமாக சேதமடைந்தால், மிக முக்கியமான உடல் செயல்பாடுகளை செயற்கைச் சுவாசம் மற்றும் மருந்துகளால் மட்டுமே பராமரிக்க முடியும். வாழ்க்கைக்கு திரும்புவது இனி சாத்தியமில்லை. உறுப்பு நன்கொடை மேற்கொள்வது ஒரு விருப்பமாக இருந்தால், அதிக தெளிவுபடுத்தல் மற்றும் முன்னேற்பாட்டு வேலைகள் தேவைப்படுகிறது. இந் நேரத்தில் உறுப்புகள் சேதமடையாமல் இருப்பதை உறுதி செய்ய, அந் நபர் தொடர்ந்து செயற்கைச் சுவாசம் மற்றும் மருந்துகளை பெற்றுக் கொள்கின்றார். இல்லையெனில், குருதிச் சுற்றோட்டம் மற்றும் உடல் செயல்பாடுகள் விரைவாக பாதிக்கப்படும். மூளை அதன் செயல்பாடுகளை இழக்கும் போது, நபர் இறந்துவிடுகிறார். உறுப்புகள் அகற்றபடுவதற்கு முன் மரணம் அறுதியும் இறுதியுமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். மிகக் கடுமையான மூளைச் சேதத்திற்குப் பிறகு இந்த வகையான நன்கொடை தொழில்நுட்ப வாசகங்களில் (மூளை மரணத்திற்குப் பிறகு நன்கொடை) என்று அழைக்கப்படுகிறது.

**நீடித்த குருதிச் சுற்றோட்ட (இதய) நிறுத்தம் மரணத்திற்கு வழிவகுக்கிறது:**
தீவிரமாக நோய்வாய்ப்பட்ட அல்லது கடுமையாக காயமடைந்த நபரின் முன்கணிப்பு நம்பிக்கையற்றதாக இருப்பதுடன் சிகிச்சைகளும் பயனற்றதாக இருக்கும் பட்சத்தில், குறிப்பிட்ட நபர் இறப்பதற்கு ஏதுவாக உயிரைத் தக்க வைக்கும் சிகிச்சைகள் நிறுத்தப்பட வேண்டும், உறுப்பு நன்கொடை ஒரு விருப்பமாக இருந்தால், உறுப்புகளை அகற்றி எடுப்பதற்கும் மாற்றுவதற்கும் தெளிவுபடுத்தல்கள் மற்றும் முன்னேற்பாடுகள் அவசிமாகும். அப்போதுதான் உயிர் காக்கும் சிகிச்சைகள் நிறைவுக்கு வரும். சிகிச்சையின் முடிவில், குருதிச் சுற்றோட்டம் முற்றிலும் நிறுத்தப்படும் வரை இதயத் துடிப்பு குறைகிறது. இதயத்தின் அல்ட்ராசவுண்ட் பரிசோதனை இதை உறுதிப்படுத்த வேண்டும். குருதிச் சுற்றோட்டம் இல்லாமல், மூளைக்கு இரத்தம் வழங்கப்படாது. மூளை அதன் செயல்பாடுகளை இழக்கிறது என்பதுடன் அந் நபர் இறக்கிறார். கடைசி இதயத் துடிப்புக்கு ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு மரணம் உறுதிபடுத்தப்பட வேண்டும். அதன் பிறகு, உறுப்புகள் உடனடியாக அகற்றப்படுகின்றன. நீண்ட கால குருதிச் சுற்றோட்ட நிறுத்தத்திற்கு பிறகு இந்த வகையான நன்கொடை தொழில்நுட்ப வாசகங்களில் (சுற்றோட்ட இறப்புக்குப் பிறகு நன்கொடை) என்று அழைக்கப்படுகிறது.

## மரணத்தை உறுதிப்படுத்துதல்

இறந்த நபரிடமிருந்து உறுப்புகளை அகற்றுவதற்கு முன், அவரின் மரணம் சந்தேகத்திற்கு இடமின்றி உறுதிப்படுத்தப்பட வேண்டும். இதற்கென சிறப்புப் பயிற்சி பெற்ற இரண்டு மருத்துவர்கள் மூளை மற்றும் மூளைத் தண்டுகளின் செயல்பாடுகள் செயலிழந்துள்ளன என்பதை நிரூபிக்க வேண்டும் (இது மூளை இறப்பு கண்டறிதல் என்றும் குறிப்பிடப்படுகிறது). மரணம் என்று உறுதிப்படுத்தும் மருத்துவர்கள், உறுப்புகளை அகற்றும் அல்லது மாற்று அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவக் குழுவில் இருத்தலாகாது.

## உறுப்பு அகற்றி எடுக்கப்படல்

மரணம் சந்தேகத்திற்கு இடமின்றி உறுதிப்படுத்தப்பட்ட பின், இறந்த நபர் அறுவை சிகிச்சை அறையில் (உறுப்புக்கள்) அகற்றப்படுவதற்கு தயாராக உள்ளார். பின்னர் பல மணிநேரம் நீடித்த அறுவைச் சிகிச்சை மூலம் உறுப்புகள் அகற்றப்படுகின்றன. அவர்கள் முடிந்தவரை விரைவாக மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள், அங்கு பெறுநர்கள் ஏற்கனவே மாற்று அறுவைச் சிகிச்சைக்கு தயாராக உள்ளனர். திசுக்கள் நன்கொடை செய்வதற்கும் ஒப்புதல் இருந்தால், உறுப்புகள் அகற்றி எடுக்கப்பட்ட பின் அவை எடுக்கப்படுகின்றன. அகற்றப்பட்ட பிறகு, மருத்துவர்களால் கவனமாக அறுவைச் சிகிச்சை காயங்கள் மூடப்பட்டு, (மருந்து கட்டுவது போன்று) ஒரு கட்டு போடப்படும்.

## விடைபெறும் நேரம்

அறுவைச் சிகிச்சை அறையில் உறுப்புகள் அகற்றப்படும் வரை உறவினர்கள் நன்கொடையாளருடன் அதிக நேரம் இருக்க முடியும். சிறப்புப் பயிற்சி பெற்ற ஒருங்கிணைப்பாளர்கள் உறவினர்களைக் கவனித்து, எந் நேரத்திலும் நன்கொடை மற்றும் செயல்முறை பற்றிய கேள்விகளுக்கு பதிலளிக்கின்றனர். உறுப்புக்கள் அகற்றப்பட்ட பிறகு, இறந்தவரின் கண்கள் மூடப்பட்டு, உறுப்புக்கள் அகற்றப்பட்ட பகுதிகள் ஆடைகளால் மூடப்பட்டிருக்கும். உறவினர்கள் இப்போது இறந்தவரிடமிருந்து விடைபெற்று இறுதிச் சடங்கை ஏற்பாடு செய்யலாம். உறுப்புகளை யார் பெற்றனர் என்பதை அவர்கள் அறிந்து கொள்வதில்லை. எவ்வாறாயினும், வேண்டுதலின் பேரில், எந்த உறுப்புக்கள் மாற்றப்பட்டன மற்றும் பெறுநர்களின் உடல்நலம் எவ்வாறு இருக்கிறது என்பது அவர்களுக்கு அறிவிக்கப்படும்.



## உறுப்பு நன்கொடை

முடிவு செய்தல். அறிவித்தல். இறுக பற்றிக் கொள்ளல்.

உனது உடலுக்கு, வாழ்க்கையிலும் அதற்கு அப்பாலும் என்ன நடக்கிறது என்பதை நீயே தீர்மானிக்கவும். எனவே, உனது உறுப்புகளை நன்கொடை செய்வதற்கு உன் விருப்பத்தை உறுதி செய்து, அதைப் பற்றி உனது அன்புக்குரியவர்களுக்கு அறிவிக்கவும்.

உன் மீதுள்ள கருணையின் பேரில் செய்.

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

- **நன்கொடைக்கு பணம் கிடைக்குமா?**
  உறுப்புகள், திசுக்கள் அல்லது கலங்களை வர்த்தகம் செய்வதை உறுப்புக்கள் மாற்றுச் சட்டம் தடைசெய்கிறது என்பதுடன் நன்கொடைகள் இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறது. உறுப்புகள், திசுக்கள் அல்லது உயிரணுக்களின் நன்கொடை எப்போதும் ஒரு தன்னார்வ நன்கொடை என்பதுடன் இது நிதி ரீதியாக ஈடுசெய்யப்பட மாட்டாது. நன்கொடை செய்வதால் உறவினர்களுக்கு நிதி ரீதியாக பாதகமெதுவும் இல்லை.

- **உடலுறுப்பு நன்கொடை செய்ய முடிவெடுத்திருந்தாலும் கூட, எனது உயிரைக் காப்பாற்ற எல்லாம் உண்மையில் மேற்கொள்ளப்படுகிறதா?**
  உயிர்களைக் காப்பது எப்போதும் மருத்துவர்களுக்கு முதன்மையானதாகும். சிகிச்சை பயனற்றதாக இருந்தால், உறவினர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே சிகிச்சை நடவடிக்கைகள் நிறுத்தப்படும். நன்கொடைக்கு யாராவது ஒப்புக்கொண்டார்களா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல் இந்த முடிவு எடுக்கப்படுகிறது. உறுப்புகளை அகற்றுவதற்கு முன், மரணம் தெளிவாக இறுதியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.


## உங்கள் சொந்த நன்கொடை அட்டை ஒரு சில படிகளில்

1. உங்கள் முதல் பெயர், குடும்பப்பெயர் மற்றும் பிறந்த தேதியை தெளிவாக குறிப்பிடவும்.
2. அட்டையில் கையொப்பமிட்டு தற்போதைய தேதியை குறிப்பிடவும்.
3. உங்கள் மரணம் ஏற்பட்டால் உறுப்புகள், திசுக்கள் அல்லது கலங்களை அகற்றுவதை அனுமதிக்க வேண்டுமா, ஓரளவு அனுமதிக்க வேண்டுமா அல்லது நிராகரிக்க வேண்டுமா என்பதை முடிவு செய்யுங்கள். இந்த முடிவை நீங்கள் நம்பும் ஒருவருக்கும் ஒப்படைக்க முடியும். முக்கியமானது: இந்த நான்கு விருப்பங்களில் ஒன்றுக்கு மட்டும் புள்ளடி இடவும்!
4. உங்கள் விருப்பங்களை உங்கள் அன்புக்குரியவர்களுக்கு தெரிவிக்கவும்.
5. பூர்த்தி செய்யப்பட்ட நன்கொடை அட்டையை எப்போதும் உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள் (எ.கா. உங்கள் பணப்பையில்).
6. நீங்கள் மனம் மாறினால், பழைய அட்டையை அழித்துவிட்டு, புதிய அட்டையை நிரப்பி, உங்கள் முடிவைப் பற்றி உங்கள் அன்புக்குரியவர்களுக்கு அறிவித்துக் கொள்ளுங்கள்.


## நன்கொடை அட்டை பற்றிய முக்கிய தகவல்கள்

- இறந்த பிறகு நீங்கள் நன்கொடை அளிக்க விரும்புகிறீர்களா இல்லையா என்பதைக் குறிப்பிட, இணைக்கப்பட்ட நன்கொடை அட்டையைப் பயன்படுத்தலாம். குறிப்பிட்ட உறுப்புகள், திசுக்கள் அல்லது கலங்களுக்கு நன்கொடை செய்வதை மட்டுப்படுத்தலாம்.
- ஆயத்த மருத்துவ நடவடிக்கைகள் இல்லாமல் வெற்றிகரமான மாற்று அறுவைச் சிகிச்சை சாத்தியமில்லை. எனவே நன்கொடை அட்டையானது "ஆம்" என்று நீங்கள் சேகரிப்பு மற்றும் ஆயத்த நடவடிக்கைகள் இரண்டையும் ஏற்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது ("ஆயத்த மருத்துவ நடவடிக்கைகள்" அத்தியாயத்தைப் பார்க்கவும்).
- உதாரணமாக, சேதமடைந்த எலும்புகளுக்கு மாற்றீடாக நன்கொடையிலிருந்து சந்தைப்படுத்தப்படும் பொருட்களை உற்பத்தி செய்ய பயன்படுத்த வேண்டுமாயின், திசுக்கள் மற்றும் கலங்களை அகற்றுவதற்கு பிரத்தியேக ஒப்புதல் பெறப்பட வேண்டும்.
- 16 வயதை முழுமையாக பூர்த்தி செய்த எவரும் நன்கொடை அட்டையை நிரப்ப முடியும். இளையோருக்கு நன்கொடை வழங்குவது சாத்தியம் ஏற்படுகையில், அவரது சட்ட ரீதியான பிரதிநிதி முடிவு செய்வார்.
- நன்கொடை அட்டை தொலைந்துவிட்டாலோ அல்லது கண்டுபிடிக்க முடியாமலோ இருந்தால், சம்பந்தப்பட்ட நபரின் விருப்பம் தெரிந்தால் உறவினர்களிடம் கேட்கப்படும். இல்லையெனில், சம்பந்தப்பட்ட நபரின் அனுமான விருப்பத்தை கணக்கில் எடுத்து உறவினர்கள் முடிவு செய்ய வேண்டும். எனவே, உங்கள் விருப்பத்தைப் பற்றி எப்போதும் உங்கள் அன்புக்குரியவர்களிடம் பேசுங்கள்..
- நன்கொடை அட்டையில் உள்ள தகவல்கள் எங்கும் பதிவு செய்யப்படுவதில்லை. எனவே அட்டையை எப்போதும் உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள்.
- நீங்கள் உங்கள் முடிவை மாற்றினால், பழைய நன்கொடை அட்டையை அழித்துவிட்டு, புதிய ஒன்றை நிரப்பி, உங்கள் உறவினர்கள் அல்லது நீங்கள் நம்பும் ஒருவருக்குத் தெரிவிக்கவும்.
- வெளிநாட்டில் இருந்தான நன்கொடை அட்டைகள், சுவிஸ் நன்கொடை அட்டையின் முந்தைய பதிப்புகள் அல்லது இலகுவாக கையால் எழுதப்பட்ட குறிப்பு ஆகியவை செல்லுபடியானதாகக் கருதப்படும், அவை தெளிவான நோக்கத்துடன் அனேகமாக பின்வரும் தரவுகளைக் கொண்டிருந்தால்: முதல் பெயர், குடும்பப் பெயர், பிறந்த தேதி, தேதி மற்றும் கையொப்பம்.
- வெளிநாடுகளுக்குச் செல்லும் போது, உறுப்புகள், திசுக்கள் மற்றும் கலங்கள் நன்கொடை செய்வது தொடர்பாக உள்ளூர் சட்ட விதிமுறைகள் பொருந்தும். பயணத்திற்கு முன் உரிய நேரத்தில் கேட்டறிந்து கொள்ளவும்.

*ஜெர்மன், பிரஞ்சு மற்றும் இத்தாலிய மொழிகளில் இலவச நன்கொடை அட்டைகளை இணையவாயிலாக ஆர்டர் செய்யலாம்: www.leben-ist-Teilen.ch. இந்த வரைபடம் உள்ளூர் மொழியிலும் பல்வேறு மொழிகளிலும் PDF ஆக பதிவிறக்கம் செய்யக் கிடைக்கிறது. நன்கொடை அட்டையை 058 123 80 00 என்ற எண்ணில் தொலைபேசி மூலமாகவோ அல்லது info@swisstransplant.org என்ற மின்னஞ்சல் மூலமாகவோ ஜெர்மன், பிரெஞ்சு அல்லது இத்தாலிய மொழிகளில் ஆர்டர் செய்யலாம்.*




**1.** அட்டையை அச்சுப்பிரதி எடுப்பதுடன் அதை வெட்டி எடுத்தல்.




**2.** அட்டையை நிரப்புவதுடன் அதில் கையொப்பமிடல்.




**3.** அட்டையை மடித்தல்....




.... அத்துடன் அதை சாரதிப் பத்திரம் அல்லது அடையாள அட்டை போன்றவைகளுடன் சேர்த்து வைத்தல்.

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Eidgenössisches Departement des Innern EDI
**Bundesamt für Gesundheit BAG**

**தற்சமயம் எனது இறப்பிற்குப் பின்பு உறுப்புகள், திசுக்கள் அல்லது கலன்களை எடுப்பது குறித்து கேள்வி எழுமாயின், இத்தால் நான் எனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்:**
***Ich äussere meinen Willen für den Fall, dass nach meinem Tod eine Entnahme von Organen, Geweben oder Zellen infrage kommt:***

முதல்- மற்றும் குடும்பப்பெயர் *Vor- und Nachname*

பிறந்த திகதி *Geburtsdatum* திகதி/கையொப்பம் *Datum/Unterschrift*

◯ என்னிடமிருந்து எந்த உறுப்புக்களை, திசுக்களை அல்லது கலன்களை எடுப்பதற்கும் அதனுடன் தொடர்பான வைத்திய நடவடிக்கைகளைத் தயார்படுத்துவதற்கும் நான் இத்தால் **ஆம்** என்று கூறுகின்றேன.
*Ich sage **JA** zur Entnahme jeglicher Organe, Gewebe oder Zellen und zu den damit verbundenen vorbereitenden medizinischen Massnahmen.*

**அல்லது** ◯ என்னிடமிருந்து பின்வரும் உறுப்புக்களை, திசுக்களை அல்லது கலன்களை எடுப்பதற்கும் அதனுடன் தொடர்புகொண்ட வைத்திய நடவடிக்கைகளைத் தயார்படுத்துவதற்கும் நான் இத்தால் **ஆம்** என்று கூறுகின்றேன்:
**oder** *Ich sage **JA** zur Entnahme folgender Organe, Gewebe oder Zellen und zu den damit verbundenen vorbereitenden medizinischen Massnahmen:*

◯ இதயம் *Herz* ◯ சுவாசப்பை *Lungen* ◯ ஈரல் *Leber* ◯ சிறுநீரகங்கள் *Nieren* ◯ சிறுகுடல் *Dünndarm*

◯ கணையம் (பங்கிறெயாஸ்) *Bauchspeicheldrüse (Pankreas)* ◯ கண்விழிப்படலம் (கோர்ணெயா) *Augenhornhaut (Cornea)*

◯ இதயவால்வுகள் மற்றும் இரத்தக்குழாய்கள் *Herzklappen und Blutgefässe* ◯ மேலதிகமாக திசுக்கள் அல்லது கலன்கள் *weitere Gewebe oder Zellen*

**அல்லது** ◯ அல்லது உறுப்புக்களை, திசுக்களை அல்லது கலன்களை எடுப்பதற்கு இத்தால் நான் **இல்லை** எனக் கூறுகின்றேன்.
**oder** *Ich sage **NEIN** zur Entnahme von Organen, Geweben oder Zellen.*

**அல்லது** ◯ அல்லது முடிவெடுப்பதற்குப் பின்வரும் **நம்பிக்கையான** நபரை அனுமதிக்கின்றேன்:
**oder** *Ich überlasse den Entscheid folgender **VERTRAUENSPERSON:***

நம்பிக்கைக்குரிய நபரின் முதல்- மற்றும் குடும்பப் பெயர்
*Vor- und Nachname der Vertrauensperson*

முகவரி *Adresse*

தொலைபேசி *Telefon*

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Eidgenössisches Departement des Innern EDI
**Bundesamt für Gesundheit BAG**

swiss transplant

**குறிப்பு:**

உடலுறுப்புகள், திசுக்கள் அல்லது கலன்களை எடுத்துக் கொள்வது குறித்த உங்கள் விருப்பத்தை உங்கள் உறவினர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுங்கள்.

இந்த அட்டையில் அடங்கியுள்ள விருப்பத்தை வெளிப்படுத்தும் அடிப்படை விடயமானது, உறுப்பு மாற்றீட்டு சட்டவிதி 8 மற்றும் 10க்கு அமைவாக உள்ளது.

மேலதிக தகவல்களை நீங்கள் கீழுள்ள மத்திய சுகாதார அமைச்சின் BAG இணையத்தளத்தில் காணலாம்: www.swisstransplant.org.

***Hinweis:***

*Teilen Sie Ihren Willen betreffend Entnahme von Organen, Geweben oder Zellen Ihren Angehörigen mit.*

*Grundlage für die in dieser Karte enthaltene Willensäusserung sind die Artikel 8 und 10 des Transplantationsgesetzes.*

*Weitere Informationen finden Sie im Internetportal des Bundesamtes für Gesundheit BAG unter www.leben-ist-teilen.ch oder unter www.swisstransplant.org.*

**உடலுறுப்புகளைத் தானம் செய்யும்-அட்டை**
***Organspende-Karte***

**உறுப்பு நன்கொடை**
**LEBEN-IST-TEILEN.CH**

*உடலுறுப்புகள், திசுக்கள் அல்லது கலன்களை மாற்றீடு செய்யும் நோக்கத்திற்காக விருப்பத்தை வெளிப்படுத்துவது அல்லது மறுப்பது*
*Willensäusserung für oder gegen die Entnahme von Organen, Geweben oder Zellen zum Zweck der Transplantation*

## உடலுறுப்புகளைத் தானம் செய்யும்-அட்டை

**Organspende-Karte**

# உறுப்பு நன்கொடை

LEBEN-IST-TEILEN.CH

உடலுறுப்புகள், திசுக்கள் அல்லது கலன்களை மாற்றீடு செய்யும் நோக்கத்திற்காக விருப்பத்தை வெளிப்படுத்துவது அல்லது மறுப்பது

*Willensäusserung für oder gegen die Entnahme von Organen, Geweben oder Zellen zum Zweck der Transplantation*

பிரதி

அன்புக்குரியவர்களுக்கான

**தற்சமயம் எனது இறப்பிற்குப் பின்பு உறுப்புகள், திசுக்கள் அல்லது கலன்களை எடுப்பது குறித்து கேள்வி எழுமாயின், இத்தால் நான் எனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்:**

***Ich äussere meinen Willen für den Fall, dass nach meinem Tod eine Entnahme von Organen, Geweben oder Zellen infrage kommt:***

முதல்- மற்றும் குடும்பப்பெயர் *Vor- und Nachname*

பிறந்த திகதி *Geburtsdatum* திகதி/கையொப்பம் *Datum/Unterschrift*

○ என்னிடமிருந்து எந்த உறுப்புக்களை, திசுக்களை அல்லது கலன்களை எடுப்பதற்கும் அதனுடன் தொடர்பான வைத்திய நடவடிக்கைகளைத் தயார்படுத்துவதற்கும் நான் இத்தால் **ஆம்** என்று கூறுகின்றேன.
*Ich sage **JA** zur Entnahme jeglicher Organe, Gewebe oder Zellen und zu den damit verbundenen vorbereitenden medizinischen Massnahmen.*

**அல்லது** ○ என்னிடமிருந்து பின்வரும் உறுப்புக்களை, திசுக்களை அல்லது கலன்களை எடுப்பதற்கும் அதனுடன் தொடர்புகொண்ட வைத்திய நடவடிக்கைகளைத் தயார்படுத்துவதற்கும் நான் இத்தால் **ஆம்** என்று கூறுகின்றேன்:
***oder*** *Ich sage **JA** zur Entnahme folgender Organe, Gewebe oder Zellen und zu den damit verbundenen vorbereitenden medizinischen Massnahmen:*

- ○ இதயம் *Herz*
- ○ சுவாசப்பை *Lungen*
- ○ ஈரல் *Leber*
- ○ சிறுநீரகங்கள் *Nieren*
- ○ சிறுகுடல் *Dünndarm*
- ○ கணையம் (பங்கிறெயாஸ்) *Bauchspeicheldrüse (Pankreas)*
- ○ கண்விழிப்படலம் (கோர்ணெயா) *Augenhornhaut (Cornea)*
- ○ இதயவால்வுகள் மற்றும் இரத்தக்குழாய்கள் *Herzklappen und Blutgefässe*
- ○ மேலதிகமாக திசுக்கள் அல்லது கலன்கள் *weitere Gewebe oder Zellen*

**அல்லது** ○ அல்லது உறுப்புக்களை, திசுக்களை அல்லது கலன்களை எடுப்பதற்கு இத்தால் நான் **இல்லை** எனக் கூறுகின்றேன்.
***oder*** *Ich sage **NEIN** zur Entnahme von Organen, Geweben oder Zellen.*

**அல்லது** ○ அல்லது முடிவெடுப்பதற்குப் பின்வரும் **நம்பிக்கையான** நபரை அனுமதிக்கின்றேன்:
***oder*** *Ich überlasse den Entscheid folgender **VERTRAUENSPERSON**:*

நம்பிக்கைக்குரிய நபரின் முதல்- மற்றும் குடும்பப் பெயர்
*Vor- und Nachname der Vertrauensperson*

முகவரி *Adresse*

தொலைபேசி *Telefon*

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Eidgenössisches Departement des Innern EDI
**Bundesamt für Gesundheit BAG**

swiss transplant

**குறிப்பு:**

உடலுறுப்புகள், திசுக்கள் அல்லது கலன்களை எடுத்துக் கொள்வது குறித்த உங்கள் விருப்பத்தை உங்கள் உறவினர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுங்கள்.

இந்த அட்டையில் அடங்கியுள்ள விருப்பத்தை வெளிப்டுத்தும் அடிப்படை விடயமானது, உறுப்பு மாற்றீட்டு சட்டவிதி 8 மற்றும் 10க்கு அமைவாக உள்ளது.

மேலதிக தகவல்களை நீங்கள் கீழுள்ள மத்திய சுகாதார அமைச்சின் BAG இணையத்தளத்தில் காணலாம்: www.swisstransplant.org.

***Hinweis:***

*Teilen Sie Ihren Willen betreffend Entnahme von Organen, Geweben oder Zellen Ihren Angehörigen mit.*

*Grundlage für die in dieser Karte enthaltene Willensäusserung sind die Artikel 8 und 10 des Transplantationsgesetzes.*

*Weitere Informationen finden Sie im Internetportal des Bundesamtes für Gesundheit BAG unter www.leben-ist-teilen.ch oder unter www.swisstransplant.org.*